EXAMRESULTS.LK 101986



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

22 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**அறிவுறுத்தல்கள் :**

- ✻ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
- ✻ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ✻ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ✻ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

● **தடித்த எழுத்தில்** அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'பங்கப் பழனத் துழுமுழவர்' - இங்கு **பங்கம்** என்பது
(1) பிளவு (2) சேறு (3) சேதம் (4) வளைவு

**2.** 'தச்சன் செய்த சிறுமா வையம்' - இங்கு **வையம்** என்பது
(1) உலகம் (2) பல்லக்கு (3) தேர் (4) வீடு

**3.** 'ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்' - இங்கு **ஏதிலார்** என்பதன் எதிர்க்கருத்து
(1) உதவியற்றோர் (2) காரணம் அற்றோர் (3) பகைவர் (4) உறவினர்

**4.** 'இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம்' - இங்கு **அபின்னம்** என்பதன் எதிர்க்கருத்து
(1) பின்னம் (2) முன்னம் (3) பேதமின்மை (4) ஒற்றுமை

**5.** 'சினிமா மொழி நமக்குப் பரிச்சயமில்லாத ஒன்றாக இருக்கிறது' - **பரிச்சயம்** என்பது
(1) சோதனை (2) பழக்கம் (3) உடன்பாடு (4) வழக்கம்

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**6.** பொருள் தொடர்பின் அடிப்படையில் நோக்கும்போது **வேறுபட்டு** நிற்கும் சொற்களின் இணைவு
(1) ஆம்பல் - தாமரை (2) கயல் - வரால்
(3) மூங்கில் - பனை (4) மலர் - இலை

**7.** ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களைக் கொண்ட தொகுதி
(1) புலன், கரணம், ஆவி (2) கானகம், காடு, வனம்
(3) பலம், மூலம், சாகம் (4) அளி, வளை, மேதி

**8.** ஊரவர் உபயோகத்துக்கு உரிய பொது நீர்நிலை
(1) ஊருணி (2) ஊர்மன்று (3) ஊராட்சி (4) ஊரம்பலம்

**9.** சினிமாத் துறையில் புழக்கத்தில் உள்ள editing என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) பதிப்பு (2) படத்தொகுப்பு (3) ஒளிப்பதிவு (4) ஒலிப்பதிவு

[பக். 2 ஐப் பார்க்க

**10.** ஏதேனும் ஒன்றை மிகுந்த ஈடுபாட்டோடு இலயித்துப் பார்ப்பதைக் குறிப்பிடுவதற்கு மிகப்பொருத்தமான அருஞ்சொற்றொடர்
(1) வழிமேல் விழி வைத்து (2) அகமும் முகமும் மலர
(3) வைத்தகண் வாங்காமல் (4) உள்ளத்தில் உவகை பொங்க

**11.** பிடிவாதம் செய்தலைக் குறிக்கும் மரபுத்தொடர்
(1) கங்கணம் கட்டுதல் (2) ஒற்றைக்காலில் நிற்றல்
(3) கொம்பு சீவிவிடுதல் (4) வரிந்துகட்டி நிற்றல்

**12.** 'பசுமரத்தாணிபோல்' என்னும் உவமைத் தொடரால் உணர்த்தப்படுவது
(1) இலகுவாகவும் நீங்கா வகையிலும் மனதில் பதிதல்
(2) மறக்க முடியாத வகையில் மனவேதனைப் படுதல்
(3) கண்ணுக்குப் புலனாகா வகையில் மறைந்து போதல்
(4) மீட்டெடுக்க முடியா வகையில் ஆழமாகப் பதிதல்

**13.** ஒத்த பொருள்தரும் சொற்களால் ஆன இணைமொழி
(1) ஊண்உறக்கம் (2) கள்ளம்கபடம் (3) அருமைபெருமை (4) வீடுவாசல்

**14.** ஒலிக்குறிப்புச்சொல் இடம்பெற்ற தொடர்
(1) கடலின் சீற்றம் துல்லியமாகக் கேட்டது.
(2) வானம் பளிச்சென்று இருந்தது.
(3) அது பேசாமல் கம்மென்று இருந்தது.
(4) அவள் கலீர் எனச் சிரித்தாள்

**15.** முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை விட்டு, முக்கியத்துவம் அற்ற விடயத்தில் கவனம் செலுத்தக்கூடாது என்பதை வலியுறுத்தும் பழமொழி
(1) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
(2) தும்பை விட்டு வாலைப் பிடிக்காதே
(3) மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
(4) மலையைக் கல்லி எலியைப் பிடித்தல்

**16.** இருபத்தைந்து ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
(1) வெள்ளிவிழா (2) பொன்விழா (3) அமுதவிழா (4) பவளவிழா

**17.** தொகுத்துக் கட்டிய பூக்களின் கூட்டத்தைச் சுட்டுவதற்குப் **பொருத்தமற்ற** சொல்
(1) கொத்து (2) மஞ்சரி (3) கற்றை (4) செண்டு

**18.** 'வயல்வெளி பச்சைப்பசேல் என்று இருந்தது' - இங்கு **பச்சைப்பசேல்** என்பது
(1) அடுக்குத்தொடர் (2) அடுக்கிடுக்குத்தொடர்
(3) இரட்டைக்கிளவி (4) இணைமொழி

**19.** **பொருத்தமற்ற** சொல்லைக் கொண்ட தொகுதி
(1) ஆடு : கடா, மறி, குட்டி
(2) கோழி : சேவல், பேடு, குஞ்சு
(3) மான் : கலை, பிணை, பிள்ளை
(4) மாடு : எருது, பசு, கன்று

**20.** ஆபரணம், கடமை, பாம்பு என்னும் பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்
(1) அரவம் (2) கலம் (3) பணி (4) சர்ப்பம்

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

**21.** ககர மெய் ஒலிப்பால் **வேறுபட்ட** வகையில் இடம்பெறும் சொல்
(1) பாகம் (2) நகம் (3) வேகம் (4) தங்கம்

**22.** பகுதி விகாரப்பட்ட சொல்
(1) செய்தான் (2) கண்டான் (3) நடந்தான் (4) பாடுகிறான்

**23.** 'ன்' என்னும் இடைநிலை இடம்பெற்ற சொல்
(1) போனான் (2) ஓடினான் (3) பாடுகின்றான் (4) சென்றது

[பக். 3 ஐப் பார்க்க

**24.** 'ஆல்' உருபு காரணப் பொருளில் இடம்பெற்ற தொடர்
(1) கத்தியால் உண்டான காயம் (2) கம்பனால் பாடப்பட்ட காவியம்
(3) வேகத்தால் ஏற்பட்ட விபரீதம் (4) வீதியால் சென்ற ஊர்வலம்

**25.** தோன்றல் விகாரம் இடம்பெற்ற சொல்
(1) நெற்குவியல் (2) வில்லிசை (3) தேனீ (4) மரவேர்

**26.** பின்வருவனவற்றுள் பண்புத்தொகை
(1) நீளக்காற்சட்டை (2) நிலவுலகு (3) புயற்காற்று (4) ஊர்ப்பாடசாலை

**27.** மூவிடத்துக்கும் பொதுவான வினைமுற்று
(1) வந்தேன் (2) செய்வான் (3) வாருங்கள் (4) முடியும்

**28.** அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதி
(1) கல்லு, முள்ளு, வீடு, வெளி (2) கட்டில், மெத்தை, யானை, பூனை
(3) கரும்பு, சட்டி, தாமரை, மாடு (4) எறும்பு, நெருப்பு, பரிவு, வண்டு

● **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) உருவக அணி : உள்ளக்கமலம், வேலைப்பழு, புத்தகப்பொதி
(2) வினைத்தொகை : கொதிநிலை, ஏவுகணை, ஓடுபாதை
(3) இலக்கணப்போலி : முன்றில், கடைவாய், புறநகர்
(4) மரூஉ : அருமந்த, சோணாடு, யாழ்நகர்

**30.** (1) தனிப்பெயரடை : மலர்ந்த, ஆழ்ந்த, முடிந்த
(2) தனிவினையடை : நேற்று, முன்பு, இன்று
(3) ஆக்கப்பெயரடை : விரைவான, ஆறுதலாக, மகிழ்ச்சிகரமான
(4) ஆக்கவினையடை : விரைவாக, விருப்பமாக, ஆறுதலாக

● புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப்** பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

**31.** விவசாயத்துறையை மேம்படுத்தும் நோக்கில் விவசாயிகளுக்கு உரத்தை .................... வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
(1) நிவாரணமாக (2) மானியமாக
(3) அனுசரணையாக (4) காப்புறுதியாக

**32.** மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் .................... செய்யப்பட்டது.
(1) வழக்குத் தாக்கல் (2) விசாரணை
(3) மேன்முறையீடு (4) தள்ளுபடி

**33.** அரசர்களின் புகழை பல வகையிலும் விரித்துரைப்பதையே நோக்கமாகக் கொண்ட .................... சோழர் காலத்தில் எழுந்தன.
(1) கல்வெட்டுகள் (2) சாசனங்கள்
(3) மெய்க்கீர்த்திகள் (4) சுவடிகள்

**34.** தெனாலிராமனின் நகைச்சுவை உணர்வு அரசவை .................... என்னும் அந்தஸ்தை அவனுக்குப் பெற்றுக்கொடுத்தது.
(1) ஆசுகவி (2) கவிச்சக்கரவர்த்தி
(3) விஸ்தாரகவி (4) விகடகவி

● வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

**35.** உலகிலுள்ள ஒவ்வொரு உயிரும் சுதந்திரமாக அச்சமின்றி வாழவே .................... .
(1) விரும்பும் (2) விரும்புகின்றன
(3) விரும்புகின்றனர் (4) விரும்பக்கூடும்

**36.** நீயும் ஏனைய நண்பர்களும் ஒத்துழைப்பீர்களாயின் எங்கள் திட்டம் வெற்றிகரமாக .................... .
(1) நிறைவேற்றுவோம் (2) நிறைவேற்றுவேன்
(3) நிறைவேறும் (4) நிறைவேற்றுவீர்கள்

[பக். 4 ஐப் பார்க்க

- கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு **37** தொடக்கம் **39** வரையான வினாக்களுக்கு விடை தருக.

உச்சிமலை உறவாடும் முகில்களோடே
ஊரெல்லாம் நதியோடும் வயல்களூடே
இச்சைபோல் நீரளிக்கும் ஏரி; ஈடே
இல்லாதெலாம் நிறைந்த தெமது நாடே!
பச்சைப் பசேல் என்ற பள்ளத் தாக்கு;
பால்கொட்டும் நீர்வீழ்ச்சி; தேக்கங்காடு
மெச்சிக் களைத்தேன் வா, வந்திந் நாட்டின்
மேன்மைக்கு நீ மேலும் வழிகள் காட்டு.

**37.** இக் கவிதையில் விடுக்கப்படும் அறைகூவல் எதற்கானது?
(1) நாட்டு வளத்தை எடுத்துரைப்பதற்கானது
(2) நாட்டுப் பற்றை வெளிப்படுத்துவதற்கானது
(3) நாட்டின் அழகை விவரிப்பதற்கானது
(4) தேசத் தொண்டு புரிய வலியுறுத்துவதற்கானது

**38.** வளம் சிறந்த நாடு என்பதை அதிகம் வலியுறுத்தி நிற்கும் தொடர்
(1) உச்சிமலை உறவாடும் முகில்களோடே
(2) ஊரெல்லாம் நதியோடும் வயல்களூடே
(3) இச்சைபோல் நீரளிக்கும் ஏரி
(4) ஈடே இல்லாதெலாம் நிறைந்தது

**39.** இங்கு இடம்பெற்றுள்ள உருவக அணிக்கு அடிப்படையாக அமைந்த ஒப்புமைக்கு உரிய விடயம்
(1) நிறம் (2) வடிவம் (3) பயன் (4) தொழில்

**40.** கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ - அத்தகைய பயன்மிக்க செய்தியை எடுத்துரைப்பதால் மாத்திரம் எதுவும் இலக்கியமாகிவிட முடியாது.
ஆ - அச்செய்தியை கவர்ச்சியாக எடுத்துரைக்கும்போதே அது இலக்கியமாகின்றது.
இ - அந்தச் செய்தி உலகின் ஈடேற்றத்துக்கு உதவுவதாயின் இலக்கியம் பயன்மிக்கதாக அமையும்.
ஈ - இலக்கியம் என்பது ஏதேனும் ஒரு செய்தியை உலகுக்கு எடுத்துரைப்பதாகும்.
உ - அத்தகைய இலக்கியமே மக்கள் மனங்களில் பதிந்து பயன் விளைவிக்கும்.

(1) அ, இ, உ, ஆ, ஈ (2) ஆ, ஈ, உ, இ, அ
(3) ஈ, இ, அ, ஆ, உ (4) ஈ, இ, ஆ, உ, அ

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)**

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
※ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
'பூட்டித் திறந்தெடுக்கும் பொருள்'

(ii) 'அக்காலத்து சட்ட நிபுணர்களுள்ளே தலைசிறந்தவர் அவர்'
- இந்த வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.

(iii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்கில் தருக.
'ஏன் மேனே, நீ உன்ரை மச்சாளிடம் பேசிறாயில்லையாம்.'

(iv) 'உதைபந்தாட்டப் போட்டியில் மாணவர்கள் வெற்றி பெற்றனர்'
'மாணவர்களை அதிபர் பாராட்டினார்'
மேற்படி இரண்டு வாக்கியங்களையும் இணைத்து ஒரே வாக்கியமாக எழுதுக.

(v) 'வருந்தினேன்' என்ற தன்வினையின் பிறவினை வடிவம் யாது?

(vi) 'பருந்துகள் கூட்டம் உயர உயரப் பறந்தன'
- இவ்வாக்கியத்தை வழு நீக்கி எழுதுக.

(vii) 'கூடு' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(viii) பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக்குறிகளுடன் எழுதுக.
நீயுமா புருட்டஸ் என்றான் யூலிய சீசர்

(ix) பின்வரும் வாக்கியத்தை அதில் உள்ள எழுத்து வழுக்களை நீக்கி, சரியாக எழுதுக.
'சமுகங்களுக்கு இடையில் முரன்பாடு ஏற்படுவது நல்லதல்ல'

(x) 'நேர்காணல்' என்ற சொல்லுக்கு நிகராக வழங்கும் வேறு ஒரு சொல்லைத் தருக.

(20 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i) உணவு, மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று. எல்லாத் தரப்பினருக்கும் அது தாராளமாகக் கிடைக்க வேண்டும். உணவு உற்பத்தி பெருகும்போதே அது சாத்தியமாகும். ஆகையால் அரசாங்கமும் சமூக அமைப்புகளும் தனி மனிதர் ஒவ்வொருவரும் இயலுமானவரையில் உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு உழைப்பது இன்றியமையாத கடமையாகும். இந்த விடயங்களை வலியுறுத்துவதான ஒரு **விளக்கக் கட்டுரை**.

(ii) இன்று பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள நமது நாடு அதிலிருந்து மீள்வதற்கு வெளிநாட்டு உதவிகளை எதிர்பார்ப்பதை விட உள்நாட்டு வருமானத்தைப் பெருக்குவதே சிறந்த வழியாகும். எமது நாட்டைப் பொறுத்தவரையில் வருமானத்தைப் பெருக்குவதற்கு சுற்றுலாத்துறை மிகவும் வாய்ப்பானதாகும். அத்துறையின் விருத்திக்கு ஏற்ற பல்வேறு வழிவகைகளையும் கண்டறிந்து அவற்றை மேம்படுத்துவதோடு சுற்றுலாப் பயணிகள் விரும்பி வரத்தக்க சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்திக் கொள்வதும் அவசியமாகும். இவ்வாறான விடயங்களை வலியுறுத்தும் ஒரு **மேடைப்பேச்சு**.

(iii) ஒழுக்கம் இல்லாத வாழ்க்கை அர்த்தமற்றது, பாடசாலைகள் மாணவர்களுக்கு பாடங்களைப் போதிப்பதோடு ஒழுக்க விழுமியங்களையும் வலியுறுத்த வேண்டியது அவசியமாகும் எனக் கருதும் ஒருவருக்கும், பெருந்தொகையான மாணவர்கள் காணப்படும் நிலையில் பாடசாலைகளில் கல்வி, ஒழுக்கம் இரண்டையும் போதிப்பது இயலாது, மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு பெற்றோர்களுக்கே உரியது எனக் கருதும் ஒருவருக்கும் இடையிலான **உரையாடல்**.

(iv) கல்வியை விட, செல்வத்தை விட நேர்மையே பெரிது என்று சிறுவயது முதலே கருதி வளர்ந்த அவன், படித்துப் பட்டம் பெற்று உயர் பதவியில் அமர்ந்தான். எந்த நிலையிலும் அவன் நேர்மை தவறியதில்லை. நேர்மைக்கு மாறான செயல் ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற அழுத்தம் ஒன்று, இன்று உயர்மட்டத்திலிருந்து அவனுக்குக் கொடுக்கப்படுகிறது. எந்த இழப்பை எதிர்கொண்டு என்றாலும் நேர்மையைக் காப்பேன் எனத் துணிந்தான் அவன்... இதனை அடிப்படையாகக் கொண்ட ஒரு **சிறுகதை**.

(25 புள்ளிகள்)

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

விஞ்ஞானம் மிகச் சிறந்த அறிவியற் கலையாகும். இதனை உலகம் பல வகைகளிலும் பயன்படுத்தி வருகின்றது. போக்குவரத்துச் சாதனங்களில் விஞ்ஞானம் புதுமை காண உதவியுள்ளது. இசையும், நாடகமும் பலருக்கும் பயன்படும்படியாக வானொலி, தொலைக்காட்சி முதலிய கருவிகளை விஞ்ஞானம் படைத்துள்ளது. உலகின் இயல்புகளையும் பிரபஞ்சத்தின் இரகசியங்களையும் அறியவல்ல செய்மதிகளை அது தந்துள்ளது.

இவ்வாறு அறிவும் கலைகளும் உலகெங்கும் பரவ உதவுகின்ற விஞ்ஞானமே மக்களைப் பேரழிவுக்குள் தள்ளிவிடும் பெரும் போர்களுக்கும் காரணமாக உள்ளது. வேலும் வாளும் கொண்டு எவரேனும் போர் செய்து மடிவாரானால், உலகம் இவ்வளவு கலங்கவேண்டியிராது. ஆனால், விஞ்ஞானம் தோற்றுவித்துள்ள அதிநவீன ஆயுதங்களும், அணுகுண்டுகளும், விமானங்களும், நச்சுப் புகைகளும் அனைத்துலக மக்களையும் இரவும் பகலும் நடுங்கச் செய்கின்றன.

மக்கள் உயிர்களைப் பறிப்பதில் முன்னின்று அழிவு செய்யும் விஞ்ஞானம் மக்களைக் காப்பதற்கு உதவி செய்கின்றதா எனவும் எண்ணுதல் வேண்டும். பெரிய வைத்தியசாலைகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்தால் விஞ்ஞானத்தின் உதவியை உணரமுடியும். அறுவைச் சிகிச்சைக் கருவிகள், நோய்வலியைக் குறைப்பதற்கான மாத்திரைகள், நோய் கண்டறியும் கருவிகள் முதலிய பலவற்றால் விஞ்ஞானம் செய்துள்ள அரிய சுகாதாரப் பணிகளைக் காண்கின்றோம். இவை விஞ்ஞானத்தின் முற்போக்கைப் பறைசாற்றுகின்றன.

ஆயினும் பயன் என்ன? சமுதாயத்தில் விஞ்ஞானம் அமைதியையும் மகிழ்ச்சியையும் விளைக்கிறதா? இல்லையே! விஞ்ஞானத்தை விடவும் விழுமிய மெய்யுணர்வே உலகத்துக்கு அவசியமாகும். அதுவே மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தும்; மகிழ்ச்சியை விதைக்கும்.

(10 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

**4.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நாகரிகம் எனப்படுவது ஊண், உடை, உறையுள் முதலியவற்றால் அமைவது. சமைத்தல், நெய்தல், வீடமைத்தல் முதலிய தொழில்கள் நாகரிகத்தின் முதற் படிநிலையில் நிகழ்வன. இந்நிலையிலே பொருள் வேட்டையே மக்களது நோக்கமாக அமையும்.

பொருள்களால் இன்பம் பெற முயன்று, அலைந்து அலைந்து வாடிய பின்பு, நாகரிகத்தின் இரண்டாம் படிநிலையை மக்கள் அடைவர். இந்நிலையிலே புலன்கள் வழியாக இன்பம் பெறுவது அவர்கள் நோக்கமாக இருக்கும். இதற்குக் கலைகள் உதவுகின்றன. ஓவியம், சிற்பம் முதலிய கண்ணுக்கினிய கலைகளும், இசை, கதை முதலிய செவிக்கினிய கலைகளும் இவ்விதத்திலே குறிப்பிடத்தக்கன. இங்கு கலையின்பமே மக்கள் நோக்கமாகும்.

கலைகளால் புலன்கள் ஓரளவு மகிழ்ந்ததை அறிந்த மக்கள், புலன்களைக் கடந்தும் மனம் அலைவதை உணர்வர். இம்மனமே அவர்களை மூன்றாம் படிநிலைக்கு அழைத்துவரும். புலனின்பம் சிலவேளைகளில் மட்டும் இன்பம் தருவதை அறிந்த அவர்கள், நிரந்தர இன்பம் பெற விரும்புவர். இதனைத் தர வல்லது அறமே என்பதை ஒரு கட்டத்தில் மக்கள் உணர்ந்து கொள்ளுவர். இப்படிநிலையில் அற இன்பமே மக்கள் நோக்கமாகும். இதனையே "அறத்தான் வருவதே இன்பம்" என்கிறார் திருவள்ளுவர்.

(i) நாகரிகத்தின் முதற் படிநிலையில் மக்களது தொழில்கள் எவை?

(ii) காட்சிக் கலைகளாக இங்கு கூறப்பட்டுள்ளவை யாவை?

(iii) மக்களை மூன்றாம் படிநிலைக்கு அழைத்து வருவது எது?

(iv) கலையின்பமா, அற இன்பமா எது சிறந்தது? காரணம் தருக.

(v) இப்பந்தியை எழுதிய ஆசிரியரின் பிரதான நோக்கம் யாது?

(10 புள்ளிகள்)

**5.** உதயபுரம், விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் வாழும் ஒரு குக்கிராமமாகும். விவசாயம் செய்வதற்குப் போதுமான நீர் வசதி இல்லாமை அக்கிராமம் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினையாகும். அக்கிராமத்து விவசாயத்துக்கு ஆதாரமாக உள்ள குளம், மழை இல்லாக் காலங்களில் வற்றிவிடுகின்றது. அக்குளத்தை ஆழப்படுத்திப் புனரமைத்தால் விவசாயம் மேம்பட வழியேற்படும் என்பதைச் சுட்டிக்காட்டி, அதனைப் புனரமைத்துத் தருமாறு வலியுறுத்தி, கிராம முன்னேற்றச் சங்கத்தின் செயலாளர் க.நச்சினார்க்கினியன் என உம்மைக் கருதிக் கொண்டு உமது பிரதேச நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளருக்கு **100** சொற்களில் **கடிதம்** ஒன்று எழுதுக.

**அல்லது**

உதயபுரம் கிராமத்தின் முத்தமிழ் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. அடுத்த ஆண்டுக்கான புதிய நிருவாகிகள் தெரிவும் அதை அடுத்து புதிய நிருவாகம் நடைமுறைப்படுத்தவுள்ள எதிர்காலத் திட்டங்கள் குறித்த கலந்துரையாடலும் இடம்பெற்றன. இறுதியில் அத்திட்டங்கள் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முத்தமிழ் மன்றத்தின் செயலாளர் க.நச்சினார்க்கினியன் என உம்மைக் கருதிக்கொண்டு அன்றைய கூட்டம் தொடர்பாக **100** சொற்களில் **அறிக்கை** ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

❋ ❋ ❋

101986

OL/2022(2023)/22-T-III

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

22 T III

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

அறிவுறுத்தல்கள் :

※ அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
※ **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
※ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை தருக.

(i) "எட்டுணையானும் இரவாது தான் ஈதல் எத்துணையும் ஆற்றல் இனிது"

(அ) எட்டுணை என்பதைப் பிரித்து எழுதுக.

(ஆ) எத்துணை என்பதன் பொருள் யாது?

(ii) "பொதிகை வரையினிற் கால் கொண்டு"

(அ) பொதிகை என்பது யாது?

(ஆ) 'கால் கொண்டு' என்பதனை விளக்குக.

(iii) "காவற்பரணில் கண்ணுறங்கும் வேளையிலே கண்ணான மச்சி வந்தென் காலூன்றக் கண்டேனே"

(அ) தலைவியின் முக்கியத்துவத்தை தலைவன் எச்சொல்லால் வெளிப்படுத்துகின்றான்?

(ஆ) இங்கு 'காலூன்றல்' என்பதன் பொருள் யாது?

(iv) "சினிமா மொழி, மொழிபெயர்க்க முடியாத ஒன்று. அது மனித குலத்துக்கே பொதுவானது"

(அ) சினிமா மொழிக்கும் ஏனைய மொழிகளுக்கும் இடையிலான வேறுபாடு யாது?

(ஆ) சினிமா மொழி எந்த மொழி பேசுவோராலும் விளங்கிக் கொள்ளத்தக்கது என்பதை உணர்த்தும் தொடர் யாது?

(v) "தங்கச்சியை வாரிக்கொண்டா. அவட கண்கள் இரண்டும் ததும்பிப் பீறின"

(அ) 'தங்கச்சியை வாரிக்கொண்டா' என்பதன் மூலம் வெளிப்படும் உணர்ச்சி யாது?

(ஆ) தங்கச்சியை வாரிக்கொண்டது யார்?

(vi) "குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்"

(அ) இங்கு மனிதனின் சிறந்த செயலாகக் கூறப்படுவது யாது?

(ஆ) 'குணக்குன்று' என்பது என்ன அணி?

(vii) "மூடருக்கும் பேடருக்கும் முதியோர் மெலியோர்க்குந் தேடருநல் இரத்தினம் போற் தெரிவையரைச் சேர்த்துவரோ?"

(அ) 'பேடர்' எனப்படுபவர் யாவர்?

(ஆ) இங்கு பெண்கள் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றனர்?

[பக். 2 ஐப் பார்க்க

(viii) "மடப்பாவை தன்வரமும்
என்வரமும் வழுவா வண்ணம்
கோடுகின்ற மொழியவன்பால் எனைத் தூது விடுக."

(அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
(ஆ) கோடுகின்ற மொழியவன் யார்?

(ix) "நெறி திறம்பாத் தன்மெய்யை நிறுத்தாக்கி இறந்தான் தன் இளந்தேவி"

(அ) 'இளந்தேவி' எனப்படுபவள் யார்?
(ஆ) இங்கு தசரதனுடைய எச்சிறப்பு உணர்த்தப்படுகின்றது?

(x) "யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றும் யாதானும் நாடாமால் ஊராமால் என்றும் கூறுவதற்கு இம் மனப்பான்மை ஊக்கமளித்தது."

(அ) இங்கு சுட்டப்படும் மனப்பான்மை எது?
(ஆ) 'யாதானும் நாடாமால் ஊராமால்' என்ற தொடரை விளக்குக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

(அ) எத்தகையவருடைய நட்பைப் பேணக் கூடாது? ஏன்?
(ஆ) நாயின் நன்றி உணர்வு வெளிப்படுத்தப்படும் விதத்தை விளக்குக.

(ii) பேதைமை என்பதுஒன்று யாதெனில் ஏதம் கொண்டு
ஊதியம் போகவிடல்.

பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல்.

(அ) பேதைமை என்பதை வரைவிலக்கணம் செய்க.
(ஆ) 'காதன்மை கையல்லதன்கண் செயல்' என்ற தொடரை விளக்குக.

(iii) நீரெ டுத்து வருதற் கவள்மணி
நித்தி லப்புன் னகைச்சுடர் வீசிடப்
போரெ டுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்குத் தினந்தொறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்ந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெ டுத்த புலையியற் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல்போல்

(அ) காதலி நீரெடுக்கச் செல்வதை பாரதியார் விவரிக்குமாற்றை விளக்குக.
(ஆ) காதலிக்காக தான் காத்திருப்பதை விவரிப்பதற்கு பாரதியார் கையாண்ட உவமையை விளக்குக.

(iv) பக்குவமாகப் பணியாரம் செய்து பனை நார்ப்பெட்டியில் மூடி மாடாவில் மறைத்து வைத்ததுபோல இவ்வளவு கவனமாக இந்தக் கதையை கோப்பிலே செருகி வைத்தேனே! எங்கே போனது. இறக்கை முளைத்துப் பறந்துவிட்டதா? பனி மூடிய அந்த அதிகாலையிலும் நான் நண்பரைத் தேடிக் கொண்டு ஓடினேன்.

(அ) கோப்பினைப் பாதுகாத்த முறைமையை விளக்குவதற்கு ஆசிரியர் கையாண்ட உவமையில் நீர் காணும் சிறப்பினை விளக்குக.

(ஆ) தொலைந்த கோப்பினைக் கண்டுபிடிப்பதில் அவர் கொண்டிருந்த ஆதங்கம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

(v) வாதத்துக்கென்று வந்திருந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியில் போய்விட்டார்கள். போனவர்கள் பின் உள்ளே வரவில்லை. தப்பித்துக்கொள்ள வழிவகைகளின்றித் தம்மை அறியாமலே வாய்குழறி அகப்பட்டுக்கொண்டவர்கள் தமது உடல் நடுங்க நாத் தழுதழுத்து பிறிட்டோ தக்கவர் அல்லர் என்று தாமே சொல்லிச் சமாதானப்பட்டுக் கொண்டார்கள். அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிறிட்டோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றுவிட்டது. ஆறுமுக நாவலர் அவர்களின் ஆசீர்வாதத்தால் சேர் பொன். இராமநாதன்துரை அன்று தொடக்கம் அரை நூற்றாண்டுக்கு மேல் இலங்கைச் சட்டசபையில் ஓர் இலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார்.

(அ) பிறிட்டோ சார்பாக வாதிட வந்தவர்களின் இயலாமை எவ்வாறு நயம்பட விவரிக்கப்படுகின்றது?

(ஆ) இலங்கை அரசியலில் சேர் பொன். இராமநாதன் பெற்றிருந்த முக்கியத்துவம் எவ்வாறு விவரிக்கப்படுகின்றது?

($04 \times 5 = 20$ புள்ளிகள்)

**3.** குகப்படலத்தில்,

(அ) குகனது சிறப்பு

(ஆ) கைகேயியின் இழிவு

ஆகியன வெளிப்படுமாற்றினை விவரிக்குக.

**அல்லது**

(அ) 'இனி நினைந்து...' என்னும் **புறநானூற்றுப்** பாடலில் முதியவரின் ஏக்கம்

(ஆ) 'தச்சன் செய்த...' என்னும் **குறுந்தொகைச்** செய்யுளில் காதலியின் பிரிவுத் துயர்

ஆகியன வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

**4.** **இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

(அ) இலட்சியமும் சமநோக்கும் என்பதற்கான விளக்கம்

(ஆ) மணிவாசகர், தருமர், தசரதன் ஆகியோர் தத்தம் இலட்சியத்திற் கொண்ட உறுதிப்பாடு

**அல்லது**

**கம்பியூட்டர்** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) கதையோட்டத்தில் அரவிந்தன் பாத்திரம் பெறும் முக்கியத்துவம்

(ஆ) ஆசிரியரின் நகைச்சுவை உணர்வு

(15 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

- **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5.** 'தண்டாமரையினுடன் பிறந்தும்...' எனத் தொடங்கும் **விவேக சிந்தாமணிப்** பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) புல்லர், நல்லோர் ஆகியோருக்கிடையிலான வேறுபாடு

(ஆ) அந்த வேறுபாட்டை உணர்த்துவதற்கு கவிஞர் கையாண்ட உவமையின் பொருத்தப்பாடு

(10 புள்ளிகள்)

**6.** **தமிழ்ப் பண்பாடு** என்ற கட்டுரையில்

(அ) பழந்தமிழ்ப் புலவர்கள்

(ஆ) பிற்கால அறிஞர்கள்

ஆகியோரிடத்து கண்ணோட்டம் எனும் மனப்பான்மை காணப்பட்டமை எடுத்துரைக்கப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

**7.** **சீறி ஓடாத வருங்கால மனித நதி...** என்ற கவிதையில்

(அ) எழுத்தறிவின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுமாறு

(ஆ) அதனை வலியுறுத்துவதற்கு ஆசிரியர் கையாண்ட உத்தி

ஆகியன பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

※ ※ ※